# கொழும்பு மாநகர சபை
# வெற்றிடங்கள் அறிவித்தல்

## மேல் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையில் தீயணைப்புச் சேவையில் தீயணைப்புப் படைவீரர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்- 2018

கொழும்பு மாநகர சபையில் வெற்றிடங்களாகவுள்ள மேல் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையில் தீயணைப்புப் படைவீரர் பதவிகளுக்காக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதியும் கீழ்க் காணும் தகைமைகளைக் கொண்ட இலங்கை ஆண் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A-4 அளவிலான கடிதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தட்டெழுத்துச்செய்யப்பட்ட அல்லது தெளிவான கையெழுத்தினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மாநகர ஆணையாளர், மாநகர ஆணையாளர் அலுவலகம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்ப 07," எனும் விலாசத்திற்கு 2018.11.15ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் படைவீரர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என குறிப்பிட வேண்டும் என்பதுடன் 2018.11.15 திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

1. பதவிப்பெயர்: மேல் மாகாண அரச சேவையின் தீயணைப்புச் சேவையில் தீயணைப்பு படைவீரர் பதவி
2. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: அ.நி.சு: 3/2016 இன் பிரகாரம் RS-1 அ.நி.சு: 03/2016 ரூபா 29540-7x300- 27x370- 41630/=

   சம்பளம் செலுத்தப்படுவது அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்படும் பிரகாரமாகும்.
3. இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதொன்றுமாகும். தங்களுக்குரித்தான ஓய்வூதியச் சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படக் கூடிய கொள்கைரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

4. பதவிக்குரிய கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும்:-
   - I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
   - II. மேல் மாகாணத்தினுள் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் (03) காலம் நிரந்தர வதிவிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.
   - III. திருமணமாகாத ஆண் ஒருவாராக இருத்தல் வேண்டும்.
   - IV. சிறந்த நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும் என்பதுடன் சட்டவிரோத செயற்களுடன் தொடர்புபடாத ஒருவரென பொலிஸ் அறிக்கை மூலம் நிரூபிக்க வேண்டும்.
   - V. gjtpf;F Ml;Nru;g;gjw;fhf tpjpf;fg;gl;Ls;s jifikfs; tpz;zg;gq;fs; Nfhug;gLk; mwptpj;jypy; cs;s gpufhuk; rfy tpjj;jpYk; பூர்த்திசெய்யப்படிருத்தல் வேண்டும்.
   - VI. ஒரே தடவையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்திகள் அடங்களாக க.பொ.த (சா.த.) பரீட்சையில் 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்தச் சந்தர்ப்பதிலோ அல்லது இன்னும் ஒரு மேலதிக சந்தர்ப்பத்திலோ விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
   - VII. விண்ணப்பதாரிகள் உயரம் செ.மீ.162 இற்கு குறையாத மற்றும் உடல் நிறை சுட்டி 18.5 தொடக்கம் 24 வரை இருத்தல் வேண்டும்.)
   - VIII. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையாற்றுவதற்கும் போதுமானளவு உடல்,உள ஆரோக்கியமுடையவராய் இருத்தல் வேண்டும்.
   - IX. கண்பார்வை தொடர்பான தேவைகள்:- மூக்குக் கண்ணாடியின்றி அல்லது தொடுகை வில்லையின்றி கண்பார்வை குறைந்த பட்சம் 6/6 மற்றும் 6/12 இடையிலும் வர்ணங்கள் பற்றிய பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும்.
   - X. செயற்கையான உடல் மாற்றங்கள் செய்யப்படாதிருத்தல் வேண்டும். (பச்சை குத்துதல் போன்றவை.)

5. வயதெல்லை:

- வயது வருடங்கள் 18க்கு குறையாதும் 24க்கு அதிகரிக்காதும் இருத்தல் வேண்டும்.

6. ஆட்சேர்ப்பு முறை:-

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற்சார் (செய்முறை) பரீட்சையில் பெறும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களுக்காக பயிலுநர் தீயணைப்பு படைவீரர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

I. பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பயிலுநர்களும் உடல், உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

II. வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால பயிற்சிப்பாடநெறியொன்றை பயிலவேண்டும். பயிற்சிக் காலத்தில் மகிழ்ச்சிகரமான வேலை மற்றும் நடத்தையைக் கொண்டிராத அல்லது எதிர்பார்க்கப்படும் தொழில் தரத்தை அடைய முடியாத பயிலுநர் தீயணைப்பு படைவீரர்களை எதுவித நட்டஈடும் இன்றி பயிற்சில் இருந்து நீக்கும் அதிகாரம் நியமிக்கும் அதிகாரிக்கு உண்டு.

III. பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்கின்ற பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் தீயணைப்பு படைவீரர் பதவியில் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். பயிற்சி காலம் நிரந்தர சேவைக்காலத்திற்குள் கணக்கிடப்படும் என்பதுடன் பயிற்சி பூர்த்திசெய்யப்பட்டு சேவையில் அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டாவது படிமுறையில் வைக்கப்படுவார்கள்.

IV. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 10,000.00 வழங்கப்படும்.

V. பயிற்சி காலத்தினுள் எந்தவொரு பயிலுநர் தீயணைப்பு படைவிரருக்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

VI. பயிற்சிற்காக தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர் தீயணைப்பு படைவிரர்கள் நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னா் நியமனம் பெற்ற திகதி தொடக்கம் 5 வருட காலம் உரிய உள்ளூராட்சி மன்றத்தில் சேவை புரிவதாக நியமன அதிகாரியுடன் ரூபா 500,000 பெறுமதியான பிணைமுறியொன்றில் பயிற்சியை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

VII. பயிலுநரின் விருப்பத்திற்கமைய பயிற்சிபெறும் காலத்தினுள் பயிற்சியில் இருந்து வெளியேற கருதும் பட்சத்தில், பயிற்சிற்காக செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

VIII. தீயணைப்பு படைவீரர் பதவிக்கு நியமனம் பெற்ற நியமனதாரர்கள் உரிய உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைக்குள் வசிக்குமாறு பணிப்பிக்கப்படலாம்.

6.1. எழுத்துமூலப் பரீட்சை

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்திபெறும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |

6.2. தொழிற்சார் பரீட்சை

(எழுத்துமூலப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்களுக்கான தொழிற்சார் பரீட்சை-செய்முறை)

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்திபெறும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| தாங்கும் ஆற்றல் | 60 | 36 |
| சமநிலை | 40 | 24 |

7. பதவிகளுக்குரிய சேவை நிபந்தனைகளும் ஏனைய நிபந்தனைகளும்

தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், மேல் மாகாணத்தின் நிதி ஒழுங்கு விதிமுறைகளுக்கும், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்படும் வேறு நிபந்தனைகளுக்கும், குறித்த உள்ளுராட்சி மன்றத்தின் திணைக்கள் தலைவரின் கட்டளைகளுக்கும், இணங்க நடத்தல் வேண்டும். இந்தப் பதவியின் சேவை மேல் மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பது தொடர்பான இறுதிமுடிவு நியமிக்கும் அதிகாரிக்கு உரித்தானது.

வீ.கே.ஏ.அனுர
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.

2018.10……….. ஆம் திகதி
மாநகர ஆணையாளர் அலுவலகம்,
கொழும்பு மாநகர சபை,
நகர மண்டபம், கொழும்பு 07.

இல: [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

# கொழும்பு மாநகர சபை

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

***மேல் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புச் சேவையில் தீயணைப்புப் படைவீரர் பதவிக்காக இணைத்துக்கொள்ளல் - 2018***

1. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) (Mr.)

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ....................................................................................................................

…… ..........................................................................................................................

3. I.நிரந்தர சொந்த விலாசம் (தமிழில்): ....................................................................................................................

.........................................................................................................................

II. தற்சமயம் வசிக்கும் விலாசம் : ....................................................................................................................

.........................................................................................................................

4. பிறந்த திகதி : வருடம் [ ] மாதம் [ ] நாள் [ ]

5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் அன்று வயது வரு: [ ] மாதம் [ ] நாள் [ ]

(பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்க வேண்டும்.)

6. தேசிய அடையாள அட்டை இல:

7. திருமணமானவர்/திருமணமாகாதவா; :- ...............................................

8. தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட/அலுவலக : ......................................................................

9. மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிட காலம் : ......................................................................

(கிராம சேவை அதிகாரியின் சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைத்து நிரூபிக்க வேண்டும்.)

10. உயரம் (செ.மீ.): ......................................................................

11. கல்வித்தகைமைகள் :

.........................................................................................................................

.........................................................................................................................

.........................................................................................................................

(தகைமைகளை உறுதிப்படுத்த குறித்த சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை இணைக்க வேண்டும்.)

12. தொழிற்சார் தகைமைகள் :-(இருக்குமானால்)

.........................................................................................................................

.........................................................................................................................

13. ஏனைய தகைமைகள் ( விளையாட்டு மற்றும் வேறு):

.........................................................................................................................

.........................................................................................................................

(தகைமைகளை பரிசோதிப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட புகைப்பட பிரதிகளை இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)

14. I. நீங்கள் ஏதும் கிரிமினல் குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாப்பட்டுள்ளீரா? (ஆம்/ இல்லை)
II. உங்களின் பதில் ஆம் எனின் குற்றத்தின் தன்மை மற்றும் வழங்கப்பட்ட தண்டனை என்ன?
……………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………….

15. நீங்கள் அரச சேவையில் / மாகாண அரச சேவையில் இதற்கு முன்னர் சேவையில் இருந்து விலக்கப்பட்ட அல்லது சேவையில் இருந்து விலகிச்சென்ற ஒருவரா? (ஆம்/இல்லை)

16. I. தற்பொழுது வகிக்கும் பதவி (தமிழில்):- ……………………………………………………..
II.அந்தப் பதவியில் நியமனம் பெற்ற திகதி:- ……………………………………………………
III.சேவை புரியும் திணைக்களம்/ பிரிவு:- ………………………………………………………

மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவின்படியும் நண்பிக்கையின் படியும் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிவதோடு, ஏதும் தகவலொன்று பொய்யானது அல்லது பிழையானது என நான் மாகாண அரச சேவையின் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு சேவையின் தீயணைப்பு படைவீரர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி…………………………

……………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.